10th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : போக்குவரத்துத் தேவைக் கேற்றவாறு புது ரூட்கள் அளிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.

திரு. டி. கார்ச்சா கவுடர் : எக்ஸ்ப்ரஸ் பஸ்கள் ஓடும் மார்க்கங் களில் புதிதாக பஸ் பெர்மிட்டுகள் கொடுக்கக்கூடாது என்று அரசாங்கம் கருதுகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றுமில்லை.

திரு. ஆ. தங்கவேலு : இப்போது பஸ் பெர்மிட்கள் ஒருவர் பெயரிலிருந்து வேறு ஒருவர் பெயருக்கு மாற்றுவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : சபை முன் வைக்கப்பட்டிருக்கும் பதிலில் அனுமதிக்கப்பெற்ற பெர்மிட்களின் எண்ணிக்கை, கொடுத்த பெர்மிட்டுகளின் எண்ணிக்கை என்று கூறப்பட்டிருக் கிறது. இரண்டும் ஓரே அர்த்தத்தில்தான் உள்ளது. என் கேள்வி, 'ஓப்பன் செய்யப்பட்ட புது பஸ் ரூட்கள் எவ்வளவு ?' என்ப தாகும். அதை விளக்குவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விடையில் அளிக்கப்பட்டிருக் கும் தகவல் தவிர வேறு குறிப்பான தகவல் என்னிடம் இப் போது இல்லை.

கனம் சபாநாயகர் : 'அனுமதிக்கப்பட்ட', 'கொடுக்கப்பட்ட' என்பதின் அர்த்தத்தைக் கேட்கிறீர்களா ? அதை கனம் அங்கத் தினர் படித்துத் தெரிந்து கொள்ளலாம் அல்லது ப்ரைவேட்டாகக் கேட்டுக் கொள்ளலாம்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலில் ரூட் அப்ரூவாகிறது. கிரூன்ட் செய்வது பின்னுல் வருகிறது.

Compulsory National Savings Scheme

* 82 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Union Government have consulted the State Government regarding the Compulsory National Savings Scheme; and

(*b*) what portion of the collections in the State under the scheme, is proposed to be allotted for the State Finance?

The Hon. Sri M. BHKKTAVATSALAM : (a) Yes Sir. The State Governments were informally consulted, and

(*b*) It has been indicated that the State Governments will collect and utilise the proceeds of the Compulsory Deposit Scheme relating to Land Revenue Payers. The Government of India will be collecting and appropriating the proceeds from the schemes relating to the other categories of persons.

[10th August 1963

திரு. கே. பொன்னையா: தொழிலாளர்கள் வாங்கும் போனஸில் ஒரு பகுதியை மீதம் செய்யவேண்டுமென்று முதலாளிகள் சொல்கிறார்கள். அதுவும் இத்திட்டத்தில் சேருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இது புதிய திட்டம். யார் யார் கொடுக்க வேண்டும், யார் யாருக்கு விலக்குண்டு என்பது விளக்கப்பட்டிருக்கிறது. தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. ஜே. மாதா கவுடர்: கட்டாய சேமிப்புத் திட்டத்தை சட்டமாகக் கொண்டுவந்து சட்டம் இயற்றிய பிறகு, சட்ட விரோதமாகக் கட்டாய சேமிப்பு நிதி கேட்பது சரியல்ல என்று கிளர்ச்சி செய்யும் அரசியல்வாதிகள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பிரசாரம் செய்வது ஒரு விஷயம். அதை ஆட்சேபிப்பதற்கில்லை. சட்டவிரோதமாக யாராவது நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டால் அது கவனிக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர்: ப்ராவிடன்ட் பண்டிலிருந்து கடன் கொடுப்பது போல் இந்தக் கட்டாய டெப்பாசிட் தொகையிலிருந்தும் கடன்கள் வழங்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. ஆ. தங்கவேலு: நடைமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டம் கட்டாயச் சேமிப்புத் திட்டமா? கட்டாய வரி விதிப்புத் திட்டமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதுபற்றி அங்கத்தினர் அவர்கள் தனக்கு வேண்டிய விளக்கத்தை வைத்துக் கொள்ளலாம். இக்கேள்விக்குப் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: கட்டாயச் சேமிப்பு நிதி ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் ஒன்றும் உத்திரவு இடவில்லை.

ஹரிஜன காலனிகள் (தென்னாற்காடு).

* 83 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் தென் கடலூர் மாவட்டத்தில் ஹரிஜனங்களுக்காக கட்டப்பட்ட காலனி வீடுகள் குடிபுகுமுன் விழுந்து விட்டனவா?

(இ) எவ்வளவு காலனிகளில் எவ்வளவு வீடுகள் அவ்வாறு சேதமாயின? அதற்குக் காரணமென்ன?